©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 5.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 39] CHENNAI, WEDNESDAY, SEPTEMBER 23, 2020
Purattasi 7, Saarvari, Thiruvalluvar Aandu–2051

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| HOME DEPARTMENT | |
| Code of Criminal Procedure.—Declaration of Change of Certain Villages from Kariyapattinam Police Station Limit to Thalainayar Police Station limit at Vedharanyam sub-division is Nagapattinam District etc. .. .. | 644-645 |
| Tamil Nadu Civil Courts Act.—Constitution of District Munsif-*cum*-Judicial Magistrate Court at Peravurani in Thanjavur District and Kunnam in perambalur District. .. .. | 645-646 |
| Protection of Human Rights Act.—Appointment of certain Official as Special Public Prosecutor (Human Rights) on tenure basis for certain period .. .. .. .. .. .. .. | 646 |
| **தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை** | |
| Industrial Tribunal for Adjudication .. .. | 646-647 |
| Labour Courts for Adjudication .. .. .. | 647-654 |
| SOCIAL WELFARE AND NUTRITIOUS MEAL PROGRAMME DEPARTMENT | |
| Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015.—Reconstitution of Child Welfare Committee in Karur District by Appointing a Chairperson and four other Members .. | 655 |
| Reconstitution of Child Welfare Committee Constituted certain District by appointing of New Chairperson and four other Members in the State of Tamil Nadu . | |
| Amendment to Notification .. .. .. | 655 |



D.T.P.—II-2 (39)

## NOTIFICATIONS BY GOVERNMENT

### HOME DEPARTMENT

**Notifications under the Code of Criminal Procedure**

**Declaration of Change of certain Villages from Kariyapattinam Police Station limit to Thalainayar Police Station limit at Vedharanyam Sub-division in Nagapattinam District under the Act.**

*[G.O. Ms. No. 140, Home (Pol.14), 6th March 2020]*

No. II(2)/HO/581/2020.—Under clause (s) of Section 2 of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974), the Governor of Tamil Nadu hereby declares that with effect on and from 6th day of March 2020, the areas specified in column (3) of the Schedule below shall cease to form part of the local area of the Police Station specified in column (2) and shall form part of the local area of the Police Station specified in column (4) thereof:-

THE SCHEDULE

| *District.* | *Police Station to which at presently attached.* | *Local areas/ Mother Villages/ Hamlets.* | *Police Station to which hereafter to be attached.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| Nagapattinam | Kariyapattinam | (1) Umbalachery<br>(2) Thulasapuram<br>(3) Maharajapuram Melpathy | Thalainayar |

**Declaration of Change of jurisdiction of certain Mother Villages including hamlets from Negamam Police Station limit to Sullthanpet Police Station limit-in Coimbatore District under the Act**

*[G.O. Ms. No. 263, Home (Pol.14), 30th July 2020, ஆடி 15, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/582/2020.—Under clause(s) of Section 2 of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974), the Governor of Tamil Nadu hereby declares that with effect on and from 30th July 2020, the areas specified in column (4) of the schedule below shall cease to form part of the local area of the Police Station specified in column (3) and shall form part of the local area of the Police Station specified in column (5) thereof.

THE SCHEDULE

| *S.No.* | *District* | *Police Station to which at presently attached* | *Local areas/Mother Villages/Hamlets* | | | | *Police Station to which hereafter to be attached* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | *Mother Village* | | *Hamlet Village* | | |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | | | | *(5)* |
| | | | | | (1) | Chinnavadham phachery | |
| | | | | | (2) | V.Vadugapalayam | |
| | | | (1) | Periyavadhamphachery | (3) | Naligoundenpalayam | |
| | | | | | (4) | Goundampalayam | |
| | | | | | (5) | Nallurpalayam | |
| | | | | | (6) | Odakkalpalayam | |
| (1) | Coimbatore | Negamam | | | (7) | V.Mettur | Sullthanpet |
| | | | (2) | Vadavelampatty | (8) | Karumpuravi palayam | |
| | | | (3) | Periyakammalapatty | (9) | Chinnakammalapatty | |
| | | | | | (10) | Varapalayam | |
| | | | (4) | S. Ayyampalayam | (11) | Manthiripalayam | |
| | | | (5) | Jallipatty | (12) | Salapalayam | |
| | | | (6) | Chengeriputhur | (13) | Chinnaputhur | |
| | | | | | (14) | SP Vadugapalayam | |
| | | | | | (15) | Salaipudur | |
| | | | | | (16) | Valasupalayam | |
| | | | | | (17) | Vengipuram | |
| | | | (7) | J. Krishnapuram | (18) | Shathampalli | |
| Coimbatore | Negamam | | | | (19) | Chinnamanaicken palayam | Sullthanpet |

| *S.No.* | *District* | *Police Station to which at presently attached* | *Local areas/Mother Villages/Hamlets* | | | | *Police Station to which hereafter to be attached* |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | *Mother Village* | | *Hamlet Village* | |
| *(1)* | *(2)* | *(3)* | | | *(4)* | | *(5)* |
| | | | | | (20) | Moolanur | |
| | | | | | (21) | T. Vadugapalayam | |
| | | | | | (22) | Salaiyur | |
| | | | (8) | Thalakarai | (23) | Pachagounden palayam | |
| | | | | | (24) | Karaiyampalayam | |

**Constitution of District Munsif-*cum*-Judicial Magistrate Court at Peravurani in Thanjavur District and Kunnam in Perambalur District under the Act**.

*[G.O. Ms. No. 306, Home (Cts-III), 4th September 2020, ஆவணி 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/583/2020.—In exercise of the powers conferred by sub-section (1) of Section 11 of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974), the Governor of Tamil Nadu, after consultation with the High Court, Madras, hereby establishes a Court of Judicial Magistrate at Peravurani in Thanjavur District.

NOTIFICATION-II

*[G.O. Ms. No. 306, Home (Cts-III), 4th September 2020, ஆவணி 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/584/2020.—In exercise of the powers conferred by sub-section (1) of Section 11 of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974), the Governor of Tamil Nadu, after consultation with the High Court, Madras, hereby establishes a Court of Judicial Magistrate at Kunnam in Perambalur District.

**Constitution of District Munsif-*cum*-Judicial Magistrate Court at Peravurani in Thanjavur District and Kunnam in Perambalur District under the Tamil Nadu Civil Courts Act.**

*[G.O. Ms. No. 305, Home (Cts-III), 4th September 2020, ஆவணி 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/585/2020.—In exercise of the powers conferred by the first paragraph of Section 4 of the Tamil Nadu Civil Courts Act, 1873 (Central Act III of 1873), the Governor of Tamil Nadu, after constitution with the High Court, Madras, hereby alters the number of District Munsifs to be appointed under the said Act for Thanjavur District as TEN with effect from the date on which the District Munsif assums charge of the District Munsif's Court at Peravurani.

NOTIFICATION-II

*[G.O. Ms. No. 305, Home (Cts-III), 4th September 2020, ஆவணி 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/586/2020.—In exercise of the powers conferred by the second paragraph of Section 4 of the Tamil Nadu Civil Courts Act, 1873 (Central Act III of 1873), the Governor of Tamil Nadu, after consultation with the High Court, Madras, hereby fixes the number of District Munsifs to be appointed for the District Munsif's Court at Peravurani in Thanjavur District as ONE with effect from the date on which the District Munsif assumes charge of that Court.

NOTIFICATION-III

*[G.O. Ms. No. 305, Home (Cts-III), 4th September 2020, ஆவணி 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/587/2020.—In exercise of the powers conferred by the Section 10 of the Tamil Nadu Civil Courts Act, 1873 (Central Act III of 1873), the Governor of Tamil Nadu, hereby directs that in the District of Thanjavur the Subordinate Judge's Court at Pattukottai shall have and exercise original jurisdiction over the District Munsif's Court at Peravurani, in addition to its existing jurisdiction with effect from the date on which the District Munsif assumes charge of the District Munsif's Court at Peravurani.

NOTIFICATION-IV

*[G.O.Ms. No. 305, Home (Cts-III), 4th September 2020, ஆவணி 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/588/2020.— In exercise of the powers conferred by the first paragraph of Section 4 of the Tamil Nadu Civil Courts Act, 1873 (Central Act III of 1873), the Governor of Tamil Nadu, after constitution with the High Court, Madras, hereby alters the number of District Munsifs to be appointed under the said Act for Perambalur District as FOUR with effect from the date on which the District Munsif assumes charge of the District Munsif's Court at Kunnam.

NOTIFICATION-V

*[G.O.Ms. No. 305, Home (Cts-III), 4th September 2020, ஆவணி 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/589/2020.— In exercise of the powers conferred by the second paragraph of Section 4 of the Tamil Nadu Civil Courts Act, 1873 (Central Act III of 1873), the Governor of Tamil Nadu, after consultation with the High Court, Madras hereby fixes the number of District Munsifs to be appointed for the District Munsif's Court at Kunnam in Perambalur District as ONE with effect from the date on which the District Munsif assumes charge of that Court.

NOTIFICATION-VI

*[G.O.Ms. No. 305, Home (Cts-III), 4th September 2020, ஆவணி 19, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/590/2020.— In exercise of the powers conferred by Section 10 of the Tamil Nadu Civil Courts Act, 1873 (Central Act III of 1873), the Governor of Tamil Nadu, after consultation with the High Court of Madras, hereby directs that in the District of Perambalur, the Subordinate Judge's Court at Perambalur shall have and exercise original jurisdiction over the District Munsif's Court at Kunnam, in addition to its existing jurisdiction with effect from the date on which the District Munsif assumes charge of the District Munsif's Court at Kunnam.

**Appointment of certain Official as Special Public Prosecutor (Human Rights) on tenure basis for certain period under the Protection of Human Rights Act**.

*[G.O. (D) No. 1000, Home (Cts-VIA), 1st September 2020, ஆவணி 16, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/HO/591/2020.—In exercise of the powers conferred by Section 31 of the Protection of Human Rights Act, 1993 (Central Act 10 of 1993), the Governor of Tamil Nadu hereby appoints Thiru TPS. Manikannan, No.3/201-1, GRT Nagar, Tiruvarur Taluk, Tiruvarur Distict, as Special Public Prosecutor for the purpose of conducting cases in Human Rights at Principal District Court, Tiruvarur District on tenure basis for a period of three years from the date of taking charge of his appointment subject to observance of existing terms and conditions of appointment.

S.K. PRABAKAR,
*Additional Chief Secretary to Government.*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**Disputes between workmen and Managements referred to Industrial tribunal for Adjudication.**

**சேஹ்ரான் ஸ்டாம்பிங் பிரைவேட் லிமிடெட்**

*[அரசாணை (ப) எண் 369, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 21 ஆகஸ்ட் 2020, ஆவணி 5, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/**592/2020–**இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்டம் இருங்காட்டுக்கோட்டையில் அமைந்துள்ள சேஹ்ரான் ஸ்டாம்பிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பு என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV / 1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

சேஹ்ரான் ஸ்டாம்பிங் பிரைவேட் லிமிடெட் எனும் நிர்வாகம், **2017–2018–**ஆம் ஆண்டிற்கு போனஸ் தொகையாக **20%** தொகையை உச்சவரம்பு இன்றியும் மற்றும் ரூ.**15000/–** கருணைத் தொகையாகவும் அனைத்து தொழிலாளர்களுக்கும் தீபாவளி பண்டிகைக்கு முன்பு வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

S.M.B.S. **காட்டன் ஸ்பின்னர்ஸ் (பி) லிமிடெட், நாமக்கல்**

*[அரசாணை (டி) எண் 385, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 28 ஆகஸ்ட் 2020, ஆவணி 12, சார்வரி திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/**593/2020.–**இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக S.M.B.S. காட்டன் ஸ்பின்னர்ஸ் (பி) லிமிடெட், நாமக்கல் என்ற நிர்வாகத்திற்கும் நாமக்கல் மாவட்ட திராவிட பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்ற சங்கம், நாமக்கல் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண்.1**

துறைவாரியாக ஒரு தொழிலாளி ஒரு பணியினை எந்த அளவுக்கு செய்ய முடியும் என்பதை அறிவியல்பூர்வமாக ஆய்வு (Scientific Study) மேற்கொண்டு வேலை பளு நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.4**

தற்போது வழங்கி வரும் அடிப்படை ஊதியத்துடன் ரூ.**1,000/–**ம் கூடுதலாக உயர்த்தி வழங்க வேண்டுமென்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 5**

1960—ம் ஆண்டை அடிப்படை ஆண்டாக கொண்டு 3,080 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் 42 பைசா வீதம் பஞ்சப்படியாக வழங்கவேண்டுமென்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 6**

தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.175/—ஐ வீட்டு வாடகைப்படியாக வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 7**

தொழிலாளர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வாக ரூ.500/— வழங்கவேண்டுமென்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 8**

இரவு ஷிப்ட்டில், பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இரவு ஷிப்டு அலவன்ஸாக ரூ.50/— வழங்கவேண்டுமென்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**க்வாங் சங் ப்ரேக் இந்தியா பிரைவேட் லிமிடெட், செங்காடு கிராமம்**

*[அரசாணை (ப) எண் 396, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 1 செப்டம்பர் 2020, ஆவணி 16, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு—2051.]*

No. II(2)/LE/594/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்டம், செங்காடு கிராமத்தில் இயங்கி வரும் க்வாங் சங் ப்ரேக் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பு என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

க்வாங் சங் ப்ரேக் இந்தியா பிரைவேட் லிமிடெட் எனும் நிர்வாகம் 2017—2018—ஆம் ஆண்டிற்கான போனஸ் தொகையாக 20% தொகையாக உச்சவரம்பு இன்றியும் ரூ.15000/— கருணைத் தொகையாகவும் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

## Disputes between workmen and Managements referred to Labour Courts for Adjudication.

**கருமலை எஸ்டேட், வால்பாறை**

*[அரசாணை (டி) எண் 326, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 4 ஜுலை 2020 ஆனி 20, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு—2051.]*

No. II(2)/LE/595/2020—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக கருமலை எஸ்டேட், வால்பாறை என்ற நிர்வாகத்திற்கம் ஆனைமலை ஒர்க்கர்ஸ் யூனியன், வால்பாறை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாபுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV / 1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

மனுதாரர் தொழிற்சங்க உறுப்பினரான திருமதி. ஜெசி, என்பவருக்கு பெரிய கருமலை தேயிலை குழுமம் நிறுவனத்தில் பணி நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட முறை விபத்துக்குள்ளாகி இறுதியாக அவரது இரண்டு கைகளும் ஊனத்தன்மைக்கு ஆளாக்கப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதால், அன்னாரின் உடல்நிலைக்கு ஏற்ப வழங்கப்பட்ட குழந்தைகள் காப்பக ஆயா பணி அல்லது தேயிலை ஆலையில் சுகாதாரப் பணியினை மீண்டும் வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், ஈரோடு மண்டலம்.**

*[அரசாணை (டி) எண் 344, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, நாள் 24 ஜுலை 2020, ஆடி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு—2051.]*

No. II(2)/LE/596/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், ஈரோடு மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும் தமிழ் போக்குவரத்து பொது தொழிற்சங்கம், ஈரோடு என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947—ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. ஜி.கே. சுப்பிரமணியன், ஓட்டுனருக்கு ப.எண். (C43425) நிர்வாகத்தின் 04–10–2016–ம் தேதியிட்ட உத்தரவின்படி தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட 01–02–2016–ம் தேதி முதல் 01–02–2016ம் தேதி முடிய 30 நாட்களை வருகை நாட்களாக பதிவு செய்து உரிய ஊதியம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 382, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (டி1)த் துறை, நாள் 28 ஆகஸ்ட் 2020, ஆவணி 12, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/597/2020.–இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், ஈரோடு மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு தொழிலாளர் தொழிற்சங்கம், ஈரோடு என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண். 1**

திரு. ஜி. வெங்கடாசலம், (ப.எண்.08 DR 2C 41058) ஓட்டுனருக்கு பயிற்சி அளிக்காமல் பெற்றுக்கொண்ட கட்டணமான ரூ.2,500/–ஐ நிர்வாகம் திரும்ப வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண்.2**

திரு. ஜி. வெங்கடாசலம், (ப.எண்.08 DR 2C 41058) ஓட்டுனருக்கு நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக பணிநியமன உத்தவு பா.எண்.2160/பி2/பபி1/தஅபோக(கோ)ஈம/08 நாள் 18–07–2008 என்பதை முதலில் பணியில் சேர்ந்த 25–09–2007–ம் தேதி முதல் முன் தேதியிட்டு அமுல்படுத்த வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 3**

திரு. ஜி. வெங்கடாசலம், (ப.எண்.08 DR 2C 41058) ஓட்டுனருக்கு பணி நிரந்தர உத்தரவை ஓராண்டில் தொடர்ச்சியாக 240 நாட்கள் பணி முடித்துள்ள 21–05–2008–ம் தேதிக்கு அடுத்த நாளான 22–05–2008ம் தேதி முதல் முன் தேதியிட்டு அமல்படுத்த வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 4**

திரு. ஜி. வெங்கடாசலம், (ப.எண்.08 DR 2C 41058) ஓட்டுனருக்கு வருமாந்திர ஊதிய உயர்வுகள், முதலாம் பணி ஆய்வு மற்றும் 10 ஆண்டுகளுக்கான சிறப்பு ஊதிய உயர்வு ஆகியவைகளை சரியான தேதிகளில் முன்தேதியிட்டு அமல்படுத்த வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 5**

திரு. ஜி. வெங்கடாசலம், (ப.எண்.08 DR 2C 41058) ஓட்டுனருக்கு 17–09–2017 தேதியிட்ட உத்தரவை இரத்து செய்து அபராதத் தொகையான ரூ.500/–ஐ வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டும். 02–10–2017 தேதியிட்ட உத்தரவை இரத்து செய்து அபராதத் தொகையான ரூ.300/–ஐ வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டும். வாராந்திர ஓய்வு மறுக்கப்பட்ட 10–04–2017 மற்றும் 18–04–2017 ஆகிய 2 நாட்களை ஈட்டிய விடுப்பு கணக்கில் சேர்க்க வேண்டும் மற்றும் பணி வழங்க மறுக்கப்பட்டுள்ள 11–04–2017 மற்றும் 19–04–2017 ஆகிய 2 நாட்களை பணி நாட்களாக அறிவித்து சம்பளம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 6**

திரு. ஜி. வெங்கடாசலம், (ப.எண்.08 DR 2C 41058) ஓட்டுனருக்கு நிர்வாகத்தால் வழங்கப்பட்ட 16–05–2018 தேதியிட்ட உத்தரவை இரத்து செய்து அபராதத் தொகையான ரூ.300/–ஐ வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**கோரிக்கை எண். 7**

திரு. ஜி. வெங்கடாசலம், (ப.எண்.08 DR 2C 41058) ஓட்டுனருக்கு ஒழுங்கு நடவடிக்கைக்கான 13–02–2018 நாளிட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணை மற்றும் அதன் மீதான தொடர் தண்டனை உத்தரவு ஆகியவைகளை ரத்து செய்து, 02–02–2018 முதல் 05–02–2018 ஆகிய 4 நாட்கள் மருத்துவ விடுப்புக்கான சம்பளத்தை வட்டியுடன் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலம்.**

*[அரசாணை (டி) எண். 372, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 25 ஆகஸ்ட் 2020 ஆவணி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/**598/2020.**—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (LPF) நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV 1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்**10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. ஆர். மகேஸ்வரன், ஓட்டுநரின் (பணி எண் **3977**), ஊதிய உயர்வினை வருங்காலம் பாதிக்கும் வண்ணம் மூன்று வருடத்திற்கு நிறுத்தி வைத்து நிர்வாகம் வழங்கிய **10–06–2008** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண். 373, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 25 ஆகஸ்ட் 2020 ஆவணி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/**599/2020.**—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும் தமிழக அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம் நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV 1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்**10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. டி. சதீஷ், ஓட்டுநரின் (பணி எண் **10037**), ஊதிய உயர்வினை வருங்காலத்தில் பாதிக்கும் வண்ணம் இரண்டு வருடத்திற்கு நிறுத்தி வைத்து நிர்வாகம் வழங்கிய **24–09–2014** நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண். 375, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 25 ஆகஸ்ட் 2020 ஆவணி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/**600/2020.**—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும் தமிழக அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம் நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV 1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்**10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எச். ராஜமகேஷ், ஓட்டுநரின் (பணி எண்.**11280**) ஊதிய உயர்வினை வருங்காலம் பாதிக்கும் வண்ணம் ஒரு வருடத்திற்கு நிறுத்தி வைத்து நிர்வாகம் வழங்கிய **14–05–2018** நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா**?** ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**ஈசன் ரீரோல் லிமிடெட், ஒசூர்.**

*[அரசாணை (டி) எண். 345, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, நாள் 24 ஜூலை 2020, ஆடி 9, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No. II(2)/LE/**601/2020.**—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக ஈசன் ரீரோல் லிமிடெட், ஒசூர் என்ற நிர்வாகத்திற்கும் ஈசன் ரீரோல் ஒர்க்கர்ஸ் யூனியன் (இணைப்பு சிஐடியு) என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாக்களுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புகாக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV 1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, எழுவினாக்களுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**கோரிக்கை எண். 2**

இந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் அடிப்படைச் சம்பளத்துடன் மேலும் ரூ.6000/– அனைத்து தொழிலாளர்களுக்கும் உயர்த்தியளிக்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**கோரிக்கை எண். 3**

இந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் தற்போதுள்ள வருடாந்திர அடிப்படை சம்பள உயர்வினை ரூ.6700–200–7300, ரூ.7000–300–7900, ரூ.7500–400–8700, ரூ.8000–500–9500 என்று மாற்றி அமைக்குமாறும், இதில் எந்த இடத்தில் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் உள்ளதோ அந்த இடத்தில்பொருத்தி அமைத்திட வேண்டுமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**கோரிக்கை எண். 4அ**

இந்நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் தற்போது வழங்கப்படும் நிலையான அகவிலைப்படியுடன் ரூ.5000/– உயர்த்தி வழங்குமாறும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**கோரிக்கை எண். 4ஆ**

இந்நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் மாறும் அகவிலைப்படி தற்போது உள்ள புள்ளிக்குமேல் ஒவ்வொரு புள்ளிக்கும் ரூ.6/– வழங்குமாறும் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**கோரிக்கை எண். 5**

